Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jmrgroup.org

தமிழ் குரல் மக்கள்
tamilmakkalkural@gmail.com
RNI No.: TNTAM24840
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

காலை 10 மணி முதல்
மதியம் 2 மணி வரை -
முதல் முறை இந்த
நோட்டரை
கொண்டுவருபவர்களுக்கு
சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அமரிர் தகர் மெயின் ரோடு,
கடபாழனி, சென்னை -26

மணிப்பூரில் கார்கள் மீது துப்பாக்கிச்சூடு: 2 பெண்கள் உள்பட 4 பேர் பலி!



சென்னை – 14 நவம்பர், 2026 மணிப்பூரில் கார்கள் மீது சந்தேகத்திற்குரிய தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் பலியான சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மணிப்பூர் மாநிலம், உக்ருல் மாவட்டத்தில் இரண்டு கார்கள் மீது சந்தேகத்திற்குரிய தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், 2 பெண்கள் உள்பட நான்கு பேர் கொல்லப்பட்டதாகக் காவல்துறையினர் வெள்ளிக்கிழமை தெரிவித்தனர்.

இம்பால் - உக்ருல் சாலையில் உள்ள நியூ ஹெவன் பகுதியில் இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாகவும், சந்தேகத்திற்குரிய தீவிரவாதிகள், இரண்டு கார்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் கார்களில் பயணித்த இரண்டு ஆண்கள் மற்றும் இரண்டு பெண்கள் சம்பவ இடத்திலேயே பலியாகினர். வாகனங்களின் முன்பக்கக் கண்ணாடிகளில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்ததற்கான அடையாளங்கள் காணப்பட்டன என்றும் அவர் கூறினார்.

காங்போக்பி மாவட்டத்தில் உள்ள தபௌ குகி கிராமத்திற்கு அருகிலும், அண்டை மாவட்டமான சேனாபதியின் கைலெங்ஜாங் பகுதியிலும் இரு தரப்புக் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலின் போது, 42 வயதுடைய குகி இனப் பெண் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மேலும் இருவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நடந்து ஒரு நாள் கழித்தே தற்போதைய தாக்குதல் நிகழ்ந்துள்ளது. மணிப்பூரில் 2023 மே மாதம் பள்ளத்தாக்கைச் சேர்ந்த மைதேயி சமூகத்தினருக்கும் மலைப்பகுதியைச் சேர்ந்த குகி சமூகத்தினருக்கும் இடையே வெடித்த இன மோதலில் இதுவரை 306 பேர் பலியாகியுள்ளனர்.

மேலும், 49 பேர் காணாமல் போயுள்ளனர், ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்துள்ளனர். அதேசமயம், இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் மலை மாவட்டங்களில் குகி மற்றும் நாகா இனத்தவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல்களில் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.